வளன் ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்

தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

விளிம்புநிலை இலக்கியங்களுள் புலம்பெயர்ந்தோர் இலக்கியம்

முனைவர் ஞா.பெஸ்கி
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2

முன்னுரை

உலகெங்கும் இலக்கியப் புனிதங்கள் இன்று கேள்விக்குள்ளாக்கப்பட்டு வருகின்றன. அதிகாரத்தின் புகழ்பாடுதல் என்னும் ஒற்றை மையத்திலிருந்து விலகி, விளிம்புகளைக் கணக்கிலெடுக்க இலக்கியங்கள் தயாராகி உள்ளன. இலக்கியங்களின் பாடுபொருள் குறித்த மரபுகளின் கட்டமைவு சிதைக்கப் பெற்றுள்ளதோடு அதிகார மையங்களால் ஒடுக்கப்பட்ட மையங்களை விட்டுத் துரத்தியடிக்கப்பட்ட விளிம்புநிலை மாந்தர்களைப் பற்றி இலக்கியங்கள் பேசத் தொடங்கியுள்ளன. இத்தயை விளிம்புநிலை இலக்கியங்களுள் அரசியல் பொருளாதாரக் காரணங்களுக்காகத் தம் வாழிடத்தை விட்டுத் துரத்தியடிக்கப் பெற்ற மனிதர்களைப் பற்றிய பதிவுகளாகப் புலம்பெயர்ந்தோர் இலக்கியங்கள் உருவாகியுள்ளன. தமிழில் விளிம்புநிலை எழுத்துக்களின் எழுச்சி, அவற்றுள் புலம்பெயர்ந்தோர் இலக்கியங்கள் பெறும் சிறப்பு, அவற்றின் வரையறை, அவற்றின் செல்நெறிகள் ஆகியன குறித்து இக்கட்டுரையில்ஆராயப்படுகின்றது.

விளிம்புநிலை அரசியல்

உலகெங்கிலும் 1960களில் ஏற்பட்ட அரசியல் மற்றும் கருத்தியல்தளங்களிலான மாற்றங்கள் மனிதகுல வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளதோடு பண்பாட்டுஅதிர்வுகளையும் ஏற்படுத்தியுள்ளன. ஒடுக்கப்பட்ட மாந்தர்களை அடையாளப்படுத்துகின்ற விளிம்புநிலை எழுத்துக்கள் அத்தகைய வரலாற்றுப்பின்னணியிலே தடம்பதித்துள்ளன. இதனால்தான் அதிகார மையங்களை விட்டுத் துரத்தியடிக்கப்பெற்ற விளிம்புநிலை மாந்தர்களின் இருப்புநிலையைக் கண்டறிவதும், நிகழ்கால எழுத்துக்களில் அவர்களின் தன்னிலையை உறுதி செய்வதும் தவிர்க்கமுடியாதனவாகின்றன.

விளிம்புநிலை என்னும் பொருள்படும் ‘சபால்டன் என்னும் சொல்வழக்கு முதன்முதலில் இத்தாலிய மார்க்சியலாளர் ஆன்டோனியோ கிராம்ஸ்கியால் 1881இல் அறிமுகம் செய்யப்பெற்றது. இனம், சமூகநிலை, பால், பாலினவேறுபாடு, அல்லது சமயம் ஆகியவற்றினால் கீழ்நிலைக்கு அல்லது கீழ்த்தரத்திற்குத் தள்ளப்பட்டுள்ள தனிமனிதர் அல்லது குழுவைக் குறிக்கிறது’ மாற்று வரலாற்று எழுதியலில் முன்வைக்கப்படுகின்ற விளிம்புநிலை என்பது ‘*அரசியல் வாசிப்பின் பொருட்டுக் கட்;டமைக்கப்பட்ட கோட்பாட்டுப்புனைவு*’ [அ.மார்க்ஸ், பொ.வேல்சாமி (1998), ப.13] எனப் பொருள் கொள்ளப்படுகிறது. அடையாளங்கள் அழிக்கப்பட்டிருந்த விளிம்புநிலை மக்களுக்கு எழுத்துக்களில் தன்னிலை இடத்தை அளித்தலே இதன் நோக்கமாகும். அரசு, நாடு, மன்னர், சட்டம் ஆகியவற்றைப் புறக்கணித்தலும், அடித்தட்டு மக்களை நோக்குதலுமே இதன் செயல்பாடுகளாகும்.

விளிம்புநிலையின் தேவை

விளிம்புநிலை ஆய்வுகள் தோன்றியதற்கு- பிரெஞ்சு மாணவர் இயக்கம், வியட்நாம் போர் எதிர்ப்பு, சுற்றுச்சூழல் இயக்கங்கள், பெண்ணிய இயக்கங்கள், அறிவியல் முடிவுநிலைக்கு ஏற்பட்ட சரிவு, அமைப்பியல், பின்அமைப்பியல், பின்நவீனத்துவம் ஆகிய கோட்பாடுகள் பின்புலங்களாக அமைகின்றன. எனினும் இதனை அ. மார்க்ஸ், “அரசியல் தளத்தில் 1968 –அய் ஒரு திருப்புமுனையாகச் சொல்லலாம். பிரெஞ்சு மாணவர் இயக்கங்கள், வியட்நாம் போர் எதிர்ப்பு நடவடிக்கைகள், தேசிய இனங்களின் எழுச்சிகள், பசுமை இயக்கங்கள், அமெரிக்கக்கறுப்பர்களின் சிவில் உரிமை இயக்கங்கள், வேலை இல்லாதோரின் இயக்கங்கள் என்பதாக வெளிப்பட்ட அரசியல் செயல்பாடுகளில் பின்நவீனத்துவத் திருப்பங்களுக்கான சில கூறுகள் தென்பட்டன. வழக்கமான அடையாளங்களை மறுத்துச் சில புதிய அடையாளங்களுடன் அல்லது அடையாளமின்மையுடன் அரசியல் செயற்பாடுகள் சாத்தியம் என்பதை இவை உலகுக்கு அறிவித்தன” [தி.சு.நடராசன், அ.ராமசாமி (1998), ப.51] என்று இதன் வழித்தடத்தை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளார்.

ரணஜித் குகா, பார்த்தா சாட்டர்ஜி, ஞானேந்திர பாண்டே, திபேஷ் சக்கரவர்த்தி ஆகியோர் மாற்று வரலாற்று ஆய்வுமுறையாக இதனை இந்தியாவில் அறிமுகப்படுத்தினர். ஏனெனில் இதற்கு முன்புவரை அமைந்திருந்த காலனிய வரலாறு, தேசிய வரலாறு, மார்க்சிய வரலாற்றெழுதியல் ஆகியவற்றிற்கு முறையே வளர்ச்சிக் கோட்பாடு, தன்னுரிமைக் கோட்பாடு, உற்பத்திக் கோட்பாடு என்னும் கதையாடல்கள் அடிப்படையாக அமைந்திருந்தன. அவற்றில் மையத்திற்கும் விளிம்பிற்கும் உள்ள உறவுகள் பேசப்படவில்லை. அதிலும் குறிப்பாக

மையத்தைப் பற்றி மட்டுமே பேசப்பெற்றுள்ளன. எனவே அதற்கு மாறாக, அதிகாரத்தை விட்டுத் துரத்தியடிக்கப்பெற்ற விளிம்பைப் பற்றிப் பேசுகின்ற மாற்றுவரலாறு முன்வைக்கப்பெற்றது.

மையம், விளிம்பு- கருத்தாக்கம்

பால், சாதி, நிறம், நிறுவனம் போன்ற கூறுகளால் புவியியல், அரசியல், கருத்தியல், கலாச்சாரம் போன்ற தளங்களில் கீழ்நிலைப்படுத்தப்பட்ட சக்திகள் விளிம்புகள் என்றும் அதிகாரங்கள் குவிந்துள்ள சக்திகள் மையங்கள் என்றும் கருதப்படுகின்றன. எனினும் “விளிம்பு என்பது வர்க்க அடிப்படையிலான வரையறை அல்ல. வர்க்கம்/ சாதி/பால்/ நிறுவனம் எனப் பல்வேறு கூறுகளால் கீழ்நிலைப்படுத்தப்பட்ட சக்திகளாக நாம் விளிம்புநிலை மக்களைக் காண்கிறோம்”[அ.மார்க்ஸ், பொ.வேல்சாமி (1998), ப.21] என்னும் மார்க்ஸின் வரையறை இங்கு நோக்கத்தக்கது. எனவே விளிம்புநிலை அரசியல் என்பது ஆதிக்கம் x அடங்கிப்போதல் என்கிற உறவுநிலையில் வைத்து ஆராயப்படவேண்டியதாகும்.

விளிம்புநிலையினர் என்பதை அடித்தளமக்கள் எனக் குறிப்பிடும் ஆ.சிவசுப்பிரமணியன் “ மேட்டிமைக் குழுவிற்கு நேர்மாறாக எண்ணிக்கையில் அதிகமானவர்களாகவும் சமுதாயத்தின் வளங்களில் உரிய பங்கு பெறமுடியாதவர்களாகவும் குறைந்த அளவு உணவு, குறைந்த அளவு உடை, குறைந்த கல்வி பெற்று வாழும் மக்கள் பிரிவினரே அடித்தளமக்கள் எனப்படுகின்றனர். இந்தியச்சூழலில் அடித்தளமக்கள் என்பதற்குச் சாதி, செய்யும் தொழில், அரசியல் ஆதிக்கம், பாலியல் நிலை, பொருளாதாரநிலை ஆகியனவற்றில் ஏதேனும் ஒன்றில் அல்லது அனைத்து நிலையிலும் தாழ்ந்திருக்கும் மக்கள்” [ஆ.சிவசுப்பிரமணியன், (2000), ப.50]என வரையறை செய்துள்ளார்.

வெள்ளையர் ஆதிக்கத்தால் விளிம்பிற்குத் துரத்தப்பட்ட கறுப்பினத்தவர்கள், ஆணாதிக்கச்சூழலில் பாலினவேறுபாட்டை அடித்தளமாகக் கொண்டு ஒடுக்கப்படுகின்ற பெண்கள், அரசியல் மற்றும் சமூகவியல் காரணங்களால் பிறந்த மண்ணை விட்டுத் துரத்தியடிக்கப்பட்டுப் புகலிடத்தில் இரண்டாம் தரக்குடிமக்களாகக் கருதப்படுகின்ற புலம்பெயர்ந்தோர், சாதியப்படிநிலைகளைக் கருத்தியலிலும் நடைமுறையிலும் உள்வாங்கிக்கொண்ட இந்தியச்சமூகத்தில் தலித்துகள் ஆகியோர் விளிம்புநிலையினராகவே கருதப்படுகின்றனர்.

இவர்களைத் தவிர பல்வேறு காரணங்களால் பாலியல்தொழிலுக்குத் தள்ளப்பட்ட பாலியல்தொழிலாளர்கள், தனக்கெனப் பாலினஅடையாளம் இன்றிக் கேலிப்பொருளாகவே பல்வேறு தளங்களில் நோக்கப்படுகின்ற திருநங்கையர்;, உடல்உறுப்புகளில் வெளிப்படுகின்ற

மாற்றங்களை முன்னிறுத்தி விரட்டப்பட்டிருக்கின்ற தொழுநோயாளிகள், அறிந்தோ அறியாமலோ நுழைந்த கிருமிகள் உருக்குலைத்ததால் வாழ்நாள்களை எண்ணிக்கொண்டிருக்கும் எய்ட்ஸ் நோயாளிகள் போன்றோரும் விளிம்புநிலை மக்களேயாவர். இவர்களால் படைக்கப்பெற்ற இலக்கியங்களுள் தற்கால இலக்கியப் பரப்பைப் பெண்ணியம், தலித்தியம், புகலிடம் ஆகிய கூறுகள் பொருந்திய படைப்புகளே பெருமளவில் கையகப்படுத்தியிருக்கின்றன. எனினும் விலைமகளிர், திருநங்கையர், தொழுநோயாளிகள், எய்ட்ஸ்நோயாளிகள் குறித்த பதிவுகள் இதழ்கள், நூல்களில் இடம்பெறுகின்றனவே தவிர தொகுதிகளாகப் பெருமளவில் அறியப்படவில்லை.

புலம்பெயர்ந்தோர் இலக்கியம்

“இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்களின் காரணமாக அந்நாட்டை விட்டு வெளியேறிவிட்ட லட்சக்கணக்கான தமிழர்கள் தாங்கள் புதிதாகக் குடியேறிய நாடுகளில் தாய்நாட்டின் ஏக்கம் தீராதநிலையிலும் தங்கள் புதிய வாழ்வு ஏற்படுத்தியுள்ள சவால்களை உணர்ச்சிப்பூர்வமாகப் பதிவுசெய்யும் உந்துதலினாலும் எழுதிப் பதிப்பித்தவையே புலம்பெயர்ந்தோர்இலக்கியங்கள் “[ரெ.கார்த்திகேசு (2004), ப.141] என்று ரெ.கார்த்திகேசு குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர்ந்தோர்- வரையறை

‘டயஸ்போரா’ என்னும் சொல் ‘புலம்பெயர்வு’ என்பதைக் குறிக்கும் சொல்லாகவும் ‘லிட்ரேச்சர் ஆப் டயஸ்போரா’ என்னும் சொல் ‘புலம்பெயர்ந்தோர் இலக்கியம்’ என்பதைக் குறிக்கும் சொல்லாகவும்உலகளவில் கையாளப்பட்டு வருகின்றன. புலம்பெயர்ந்தோர் என்னும் தமிழ் வழக்கைப் புரிந்து கொள்ளுதலுக்கு ‘டயஸ்போரா’ என்னும் சொல்வழக்கைப் பற்றிய புரிதல் மிக இன்றியமையாததாகிறது.

லெக்சிகன் பேரண்ட கலைக்களஞ்சியம், “டயஸ்போரா என்பது பாலஸ்தீனத்திற்கு வெளியே வாழ்ந்த பல்வேறு யூதமக்களைக் குறிக்கின்ற- பரவலாக்கம் என்னும் பொருண்மையுள்ள கிரேக்கச்சொல்லாகும். கி.மு. 586 இல் யூதர்களின் ஆலயம் அழிக்கப்பட்டபிறகு வாணிகத்தின் பொருட்டும், புலம்பெயர்வின்; பொருட்டும் பண்டைய பாபிலோனிலும் எகிப்திலும் யூதர்களின் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது. யூதசமூகம் மேலும் சிதைந்து செல்லக் காரணமான- முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் உரோமப்பேரரசுக்கு எதிராக யூதர்கள் நிகழ்த்திய புரட்சிக்குப் பிறகு மத்தியத்தரைக்கடல் பகுதிகளிலும் குடியேற்றங்கள் நிகழ்ந்தன---இன்று புலம்பெயர்ந்தோர் என்னும் சொல்லானது

இஸ்ரேலின் நவீன யூதப்பிரதேசத்திற்கு வெளியேயுள்ள யூதகுடியேற்றங்களைக் குறிக்கப் பயன்படுகிறது” என்று குறிப்பிடுகிறது. இதனைப் புரிந்துகொள்வதற்கு வரலாற்றில் இடம்பெற்றுள்ள ‘பாபிலோனியச்சிறையிருப்பை அறிந்திருப்பது இன்றியமையாததாகிறது.

கி.மு. 598/ 597 மற்றும் கி.மு. 587/586 ஆண்டுகளில் யூதேயா நாட்டை வென்ற பாபிலோனியர்கள் யூதர்களைப் பாபிலோனியாவில் கட்டாயக் காவலில் வைத்திருந்ததே பாபிலோனியச்சிறையிருப்பு எனப்படுகிறது. கி.மு. 538 இல் பாரசீக அரசர் இரண்டாம் சைரஸ் பாபிலோனியாவை வென்று யூதர்கள் பாலஸ்தீனத்திற்குத் திரும்புவதை அனுமதித்தார். ஆனால் யூதர்களில் சிலர் பாபிலோனியாவிலேயே தங்கியிருக்க விரும்பினர். இதுவே யூதர்கள் மற்ற நாடுகளில் வாழ ஆரம்பித்ததன் தொடக்கமாகும். பாபிலோனியச் சிறையிருப்பின்போதும் தாங்கள் வாழும் வேற்றுநாடுகளின் கலாச்சார வேறுபாடுகளுக்கிடையேயும் அவர்கள் தங்கள் தேசிய உணர்வையும் சமய அடையாளத்தையும் கைவிட்டுவிடாமல் இருந்தார்கள். எசேக்கியேலும் மற்ற இறைவாக்கினர்களும் அவர்களது நம்பிக்கைக்கு உயிரூட்டினர். பிற்காலத்தில் மார்டின் லூத்தர் கிங் கத்தோலிக்க சமயத்தைத் தாக்கி எழுதிய நூலுக்குப் பாபிலோனியச்சிறையிருப்பு எனப் பெயர் சூட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

உலகவரலாற்றில் தம் சொந்தமண்ணை விட்டுத் துரத்தியடிக்கப்பெற்ற யூதமக்களை மட்டுமே சிறப்பாகக் குறித்த டயஸ்போரா என்னும் ஆங்கிலச்சொல் இன்று புலம்பெயர்ந்தோர் என்னும் பொதுப்பொருளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

“தன் இருத்தலின் அச்சம் காரணமாக எந்தவோர் இனச்சமூகம் தன்வாழிடத்தை விட்டு நீங்கிச்செல்லுதல் புலம்பெயர்வாகும்’ அவ்வாறு நீங்கிச் சென்றோர் புலம்பெயர்ந்தோர் ஆவர். அவர்களுள் முகிழ்த்தெழுந்த இலக்கியம் புலம் பெயர்ந்தோர் இலக்கியம் ஆகும்” என்று தேவகாந்தன் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் தமிழர்

ஆஸ்திரேலியாவில் குடியேறியுள்ள புலம்பெயர்ந்தோரின் சிக்கல்களை ஆராய்வதற்கென்று சிட்னிப்பல்கலைக்கழகத்தில் 1990ஆம் ஆண்டு புலம்பெயர்ந்தோர் மனுக்கள் மீதான மறுபரிசீலனை ஆணையத்தின் தலைவர் பிலிப்பா மக்கின்டோஸ் ஏற்பாட்டில் நடந்த மாநாட்டில்தான் ‘த டமில் டயஸ்போரா’ என்னும் ஆங்கிலச்சொல் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. இதுவே ‘புலம்பெயர்தமிழர்’ என இன்று பொருள் கொள்ளப்படுகிறது. புலம்பெயர் தமிழர் எனப் பொதுநிலையில் பொருள் அறியப்பட்டாலும் இலங்கையில் நடைபெற்று வரும் இனக்கலவரத்தின் காரணமாகத் தம் சொந்த வாழிடத்தை விட்டு உலகின்

பலபகுதிகளில் குடியேறிவாழ்கின்ற தமிழர்களைக் குறிக்கின்ற சொல்லாகவே இன்று குறிப்பாக அடையாளம் காணப்படுகிறது. எஸ்.பொ.இதனைப் ,"புலம்பெயர்ந்து வெள்ளைத்தோலர்களின் நாகரிகம் செழிக்கும் நாடுகளிலே புகலிடம் பெற்று வாழும் ஈழத்தமிழர்களே Tamil diaspora என்கிற சொற்றொடரால் குறிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய இலக்கியப்படைப்புகளையே புலம்பெயர்ந்தோர்இலக்கியம் என்பது குறிக்கும்" [எஸ்.பொ.(2006), ப.13] 18 என்று சுட்டியுள்ளார்.

ஈழத்து இலக்கிய வழக்கில் இரண்டு விதமான புலம்பெயர்வுகள் செல்வாக்குப் பெற்றுள்ளன. ஒன்று உள்ளூரில் நிகழ்ந்த புலம்பெயர்வு அதாவது இலங்கையினுள்ளாகப் பிறகிராமங்களுக்கும் பிற பிரதேசங்களுக்குமிடையே நிகழ்ந்த இடப்பெயர்ச்சி ஆகும். மற்றொன்று அன்னிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்று வாழ்வதாகும். அதாவது ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆசியா ஆகிய கண்டங்களுக்குப் புலம்பெயர்ந்து வாழ்தலாகும். எனினும் ஈழத்து மரபில் புலம்பெயர்ந்தோர் என்னும் சொல் வழக்கு பெருமளவில் இரண்டாம்நிலையைச் சுட்டுவதாகவே அமைகிறது.

புலம்பெயர்ந்த தமிழர்களிடையே மூன்று விதமான பிரிவினரை அடையாளம் காணமுடிகிறது.

1. பழைய தலைமுறையினர்
2. புகலிடம் ஒன்றைத் தேடிக்கொண்ட தலைமுறையினர்
3. புகலிடச் சூழலில் கல்விகற்கும் தலைமுறையினர்

அவற்றுள் முதற்பிரிவினர் இலங்கை மண்ணில் தாங்கள் மேற்கொண்ட கடினஉழைப்பால்; பிள்ளைகளைக் கல்வியாளர்களாகவும் பணம் ஈட்டும் வலிமையுடையவர்களாகவும் மாற்றியவர்கள். பிள்ளைகளின் வாழ்க்கைக்குப் போர் ஏற்படுத்திய அச்சுறுத்தல்கள் காரணமாக அவர்களை அயல்நாடுகளுக்கு அனுப்பிவிட்டுச் சொந்தமண்ணிலே வாழ்ந்தவர்கள். பின்னர் வாழ்வின் பிற்பகுதியில் பிள்ளைகளோடு சேர்ந்து வாழ்வதற்காகப் புகலிடங்களைச் சென்று அடைந்து அங்குக் காணப்படும் வாழ்க்கைமுறையோடு ஒத்து வாழமுடியாமல் நொந்து இருப்பவர்கள் ஆவர்.

இரண்டாம் பிரிவினர் கொடிய இன்னல்களுக்கு மத்தியில் புகலிடம் ஒன்றைத் தங்களுக்கெனத் தேடிக்கொண்டவர்கள். கடன் வாங்கிப் பல கனவுகளைக் கண்டு புதிய இடங்களை அடைந்தவர்கள்;. வேலை தேடுவதிலும் கடுமையான வேலைகளைச் செய்வதிலும்

ஈடுபட்டுத் தனிமைவாழ்க்கையை நகர்த்திக்கொண்டிருப்பவர்கள் ஆவர். பின்னர் இலங்கையில் உள்ள தங்கள் உறவுகளைப் பின்னர் வரவழைத்துக் கொள்பவர்களாக அவர்களில் சிலர் உள்ளனர்.

மூன்றாம் பிரிவினர் புகலிடங்களை மிகச் சிறுவயதில் அடைந்தவர்களாகவும் அங்கேயே பிறந்தவர்களாகவும் உள்ளனர். கல்வி கற்கும் சூழலில் அவர்கள் அனுபவிக்கின்ற விழுமியங்களும் வாழ்க்கைமுறைகளும் அவர்கள் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துவனவாகவே உள்ளன.

புலம்பெயர்ந்தோருக்கு மொழிப்புலமை இல்லாமை, நிருவாக முறைகள் பற்றிய அனுபவமின்மை, தங்கும் இட வசதியின்மை போன்ற குறைவுகள் நேரிட்டதால் முதல் தலைமுறையினர் அல்லாடிப் போனார்கள். இதனால் உடனடியாக வேலைகளில் சேர்;ந்தார்கள். தொடக்கக் காலத்தில் உணவுக்கூடங்களில் எடுபிடியாளர், துப்புரவாளர், விளம்பரப் பத்திரிகைகள் விநியோகிப்பவர் போன்ற வேலைகளையே பெற்று வந்தனர். பின்னர் அனுபவத்தின் விளைவாக நடைமுறைப் பேச்சுமொழியைக் கற்றுக் கொண்டனர். இதனால் 1980களில் விழிப்புணர்வைப் பெற்றுக்கொண்டனர்.

எனினும் புதிதாகப் புலம்பெயர்ந்தோரில் பெரும்பாலானோர் இளைஞர்கள். இவர்கள் வாழ்ந்து வரும் சூழல்கள் இவர்களது புலப்பெயர்வின் நெருக்கடியை மேலும் கூரியதாக்கியுள்ளன. இவர்களிற் பெருவாரியானோர் வசதி தேடி நாட்டை விட்டு ஓடியவர்களல்லர், பலர் உயிருக்கு அஞ்சி வந்தோர். புகலிடத்தில் அவர்கள் தேடிய அனுதாபம் தொடக்கத்தில் சிறிது கிடைத்தாலும், காலப்போக்கில் அன்னியராகவும் கறுப்பராகவும் இவர்கள் அடையாளங் காணப்பட்டது மட்டுமன்றி ஒட்டுண்ணியாகவும் வெறுத்தொதுக்கப்படும் நிலைக்கு உள்ளானார்கள்" என்று சிவசேகரம் குறிப்பிடுகிறார்.

தமிழில் புலம்பெயர்ந்தோர் இலக்கியம்

சொந்தமண்ணை விட்டுத் துரத்தியடிக்கப்பட்டுப் பிற பகுதிகளைத் தஞ்சமாக அடைந்து வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றவர்களால் படைக்கப்படுகின்ற இலக்கியங்களே புலம்பெயர்ந்தோர் இலக்கியம் எனப்படுகிறது.

1987-88 காலம் முதல்தான் தமிழ் இலக்கிய உலகில் 'புலம்பெயர்ந்தோர் இலக்கியம்' என்ற மரபு தோன்ற ஆரம்பித்தது. ஏனெனில் இக்காலப் பகுதியில் தான் பெருமளவில் இளைஞர்களும் குடும்பங்களும் இலங்கையிலிருந்து வன்முறைகளுக்கு அஞ்சி மேலைநாடுகளுக்கு அகதிகளாகச் சென்றனர். இதனை "இன்று ஏறத்தாழ ஐந்து இலட்சம் பேர் அகதிகளாக வெளிநாடுகளில்

உள்ளனர். இவ்வாறு சென்றவர்களுள் இலக்கிய ஆர்வமுடையோர் போராட்டக் குழுக்களின் உட்சண்டைகள் பற்றியும் எழுதினரெனினும் படைப்பிலக்கியங்களில் புலம்பெயர்வு ஏற்படுத்திய இன்னல்களைப் பற்றியும் அந்நியப்பட்டுப் போன வாழ்க்கை பற்றியும் பதிவு செய்துள்ளனர்" [கார்த்திகேசு சிவத்தம்பி (2000), ப.74] என்று கா.சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார்.

தொண்ணூறுகளில் நடுப்பகுதிவரையும் புலம் பெயர்ந்தோர் இலக்கியம் என்று சொல்லப்பட்டு வந்த இவ்விலக்கியம் பின்னர் புகலிட இலக்கியமென்று பெரும்பாலும் கண்டம் கடந்த தமிழர்களால் குறிக்கப்பெற்று வருகிறது. புலம்பெயர்ந்தோர் இலக்கியம், புகலிட இலக்கியம் ஆகிய வழக்குகள் ஒன்று போலவே தோன்றினாலும் நுட்பமாக நோக்கின் இரண்டிற்கும் இடையே வேறுபாடுகளைக் கண்டறிய முடியும். புலம் பெயர்ந்தோர் என்பதில் மக்கள் முன்னிலைப் படுத்தப் பெற்றிருப்பர். 'புகலிடம்' என்பதில் அகதியாய்த் தஞ்சமடைந்த இடம் முன்னிலை பெற்றிருக்கும் என்னும் தேவகாந்தனின் கருத்து ஒப்பிடத்தக்கது.

தஞ்சம் வேண்டிப் புகலிடமாக ஈழத்தமிழர்கள் பிரிட்டன், ஜெர்மனி, பிரான்;ஸ், சுவிட்சர்லாந்து, நார்வே, சுவீடன், டென்மார்க் போன்ற நாடுகளுக்குச் செல்கிறார்கள். ஆங்கில மரபுள்ள நாடுகளுக்குச் செல்வது ஒரு தன்மையாகவும் ஆங்கிலம் அல்லாத நாடுகளுக்குச் செல்வது பிறிதொரு தன்மையாகவும் அமைகின்றது. பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து போன்ற ஆங்கில மரபு அல்லாத நாடுகளைத் தஞ்சமாக அடையும்போது மொழி ஒரு சிக்கலாக அமைந்து விடுகிறது. தொழில்முறை, ஊதியம், உடை, உறையுள், வசதிகள், உணவுப்பழக்க வழக்கம், கல்விமுறை போன்றவற்றில் அந்தந்த நாடுகளின் மேலாதிக்கப் பண்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். மதஅடையாளங்களைப் பேணுவதற்கும், மொழி அடையாளங்களைக் காப்பதற்கும் போராட வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது.

எனவே புகலிடங்களில் இருந்து படைப்பாளர்களால் உருவாக்கப்படுவதோடு அவர்களின் அன்னியப்பட்டுப் போன வாழ்க்கைப் பிரதிபலிப்பாக அமைவதால் இது புகலிட இலக்கியமாக அறியப்படுகிறது. அன்னியச் சூழலில் கலாச்சாரம் முழுவதையும் இழந்து ஒன்றஇயலாத நிலையை உணர்ந்தார்கள். இதனால் தங்கள் தமிழினத்தின் அடையாளங்களைப் பாதுகாத்துத் தங்கள் பிள்ளைகளுக்கு விட்டுச் செல்லுதல் வேண்டும் என்கிற அக்கறை ஏற்பட்டது. அதற்காகத் தம் தனித்துவ அடையாளங்களைப் பேண வேண்டும் என்கிற உண்மையையும் உணர்ந்தார்கள். இந்நிலையில்தான் புகலிட இலக்கியம் உருவாக வேண்டிய தேவை ஏற்பட்டது.

ஆறாந்திணை இலக்கியம் என இது அறியப்படுவதும் உண்டு. அதற்கான காரணத்தை எஸ்.பொ. பின்வருமாறு சுட்டியுள்ளார். " தமிழ்நாட்டிலே ஐந்திணைகள் இருந்தன. திணைக்குரிய

மரபுகள் பேணிச் சங்க இலக்கியங்கள் படைக்கப்பட்டன. அந்நியமான பனிப்பாலையிலே இப்பொழுது தமிழர்கள் வாழத் தலைப்பட்டு விட்டார்கள். பனிப்பாலையிலே வாழும் அவர்கள் படைக்கும் இலக்கியத்தினை ஆறாந்திணை இலக்கியம் என அழைக்கலாம் என்கிற கருத்தும் முன்வைக்கப்பட்டது" [எஸ்.பொ. (2006), ப.28]

இதழ்களின் பங்களிப்பு

புகலிடப் படைப்புகள் படைப்பாளர்கள் வாழ்கின்ற நாடுகளில் வெளியாகும் சிறுபத்திரிகைகளில் அதிகம் வெளிவந்துள்ளன. ஆஸ்திரேலியாவிலிருந்து மரபு, அக்கினிக்குஞ்சு, கலப்பை, வெண்ணிலா ஆகிய இதழ்கள் வெளிவந்தன. டென்மார்க்கிலிருந்து வெளிவந்த காகம், சஞ்சீவி, நார்வேயிலிருந்து வெளிவந்த சுவடுகள், சுமைகள், சக்தி ஆகியன தரம் உடையனவாக இருந்தன. ஹாலந்திலிருந்து அஆஇ வெளிவந்தது. ஜெர்மனியிலிருந்து தூண்டில், தேனீ, புதுமை, கதிர், சிந்தனை, நமது குரல் , வெகுஜனம், கைவிளக்கு, ஏலையா, எண்ணம், தாயகம், வெளிச்சம், தென்றல், புதுயுகம், நம்நாடு, யாத்திரை, அறுவை, அகதிகுவியம், வண்ணத்துப்பூச்சி, ஊதா, பூவரசு, அக்கினி, சிறுவர் அமுதம் போன்ற இதழ்கள் வெளிவந்தன. கனடாவிலிருந்து தேடல், காலம், நான்காவது பரிமாணம், பார்வை, தமிழ் எழில், இனியகுரல் போன்ற இதழ்கள் வெளிவந்தன. பிரான்சிலிருந்து ஓசை, மௌனம், எக்ஸில், உயிர்நிழல், கண், சமர், புன்னகை, அம்மா ஆகியனவும் சுவிஸிலிருந்து மனிதம், விடுதலைப்பாதை போன்ற இதழ்களும் வெளிவந்துள்ளன.

இந்தச் சிற்றிதழ்களில் பல தோன்றுவதும் மறைவதுமாக உள்ளன. எனினும் பிரான்சில் இருந்து தற்போதும் வெளிவரும் 'மௌனம்', 'அம்மா', 'எக்ஸில்', உயிர்நிழல் ஆகிய இதழ்களும், இலண்டனிலிருந்து வெளிவரும் 'லண்டன் முரசு', 'நாழிகை' முதலியனவும், ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் கலப்பை, 'வெண்ணிலா' இதழ்களும் இன்றும் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. சமர், சக்தி, காலம் ஆகிய இதழ்களும் புகலிட எழுத்துக்களை வளர்த்து வருகின்றன.

புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகள் அவ்வப்போது தொகுக்கப்பட்டு வருகின்றன. சென்னையில் உள்ள 'மித்ர ஆர்ட்ஸ் ரூ கிரியேஷன்ஸ் நிறுவனம்' புகலிட இலக்கியங்களைப் பெருமளவில் பதிப்பித்து வருகின்றது. இலண்டனில் இயங்கி வரும் 'தமிழர் நலன்புரிச் சங்கம்' ஆண்டுதோறும் மலர்களை வெளியிட்டு வருகின்றது. இம்மலர்களில் புகலிட எழுத்தாளர்களின் படைப்புகள் இடம் பெற்று வருகின்றன. இம்மலர்கள் புகலிட எழுத்துக்களை முதன்மைப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு வெளிவருகின்றன.

புலம்பெயர்ந்தோர் கவிதைகள்

புதினம், சிறுகதைகளை விட உணர்வுகளை வாசகனுக்கு ஊட்டும் வலிமை கவிதைகளுக்கு உண்டு என்பதால் தங்கள் குமுறல்களையும் கோபங்களையும் தாபங்களையும் காட்ட கவிதை இவர்களுக்குத் தகுந்த ஊடகமாக அமைந்துள்ளது. ஈழப்போரின் எரிநெருப்பைத் தங்களது புகலிடக்கவிதைகளால் வெளிப்படுத்தும் கவிஞர்களுள் சி. சிவசேகரம், ராஜன்வரதராஜா, புஷ்பராஜன், கிருபா, முல்லை அமுதன் (இங்கிலாந்து), மைத்ரேயி, வ. ஐ. ச. ஜெயபாலன் (நோர்வே), ஆதவன், சன்னதமாடி, பொன்னண்ணன் (டென்மார்க்), அரவிந்தன், பாலகணேசன், இளவாலை விஜயேந்திரன்(பிரான்ஸ்), நட்சத்திரன் செவ்விந்தியன் (ஆஸ்திரேலியா), சித்தார்த்த செகுவேரா, வேல்முருகன், ரமணிதரன் (அமெரிக்கா) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் கவிதைகளில்

அ) புலம்பெயர்வு ஏற்படுத்திய இன்னல்கள்,

ஆ) புகலிடமாக அடைந்த நாட்டில் அந்நியப்பட்டுப்போன வாழ்க்கைமுறை,

இ) தாய்நாட்டைப் பற்றிய நினைவேக்கங்கள்,

ஈ) போர் மற்றும் போராளிகள் குறித்த சிந்தனைகள்,

உ) பண்பாட்டுச்சீரழிவுகள்

ஆகியன பாடுபொருள்களாக அமைந்துள்ளன. புகலிட இலக்கியப் படைப்பாளர்களின் கவிதைத் தொகுப்புகளும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன..

புலம்பெயர்ந்தோர் புதினங்கள்

புதினம்,சிறுகதை போன்ற புனைகதை இலக்கியங்களும் புகலிடப் பரப்பில் வெளிவந்துள்ளன. எண்ணிக்கையடிப்படையில் ஒப்பிடும்போது புதினங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளன. எய்ட்ஸ் நோயின் உண்மையினை எடுத்தியம்பும் வகையில் இ. தியாகலிங்கம் படைத்த அழிவின் அழைப்பிதழ் என்னும் நூலே முதல் புகலிடப் புதினமாக அறியப்படுகிறது. மாத்தளை சோமு போன்ற புலம்பெயர்ந்தோருடைய புதினங்கள் இதற்கு முன்னர் வெளிவந்துள்ள போதிலும் புகலிட அனுபவத்தைப் பேசுவதால் இது சிறப்பாகச் சுட்டப்படுகிறது. இவரது மற்றொரு புதினம் நாளை என்பதாகும். இதைத் தொடர்ந்து பல புதினங்கள் வெளிவந்துள்ளன.

புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள்

உள்ளத்து உணர்வுகளைக் குறுகிய வடிவில் வெளியிடத் துணைபுரியும் சிறுகதை என்ற இலக்கிய வகையையே அதிகமான படைப்பாளர்கள் படைத்து வருகின்றனர்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் சிறுகதைகள் அடங்கிய முதல்தொகுதியாக- எஸ்.பொ.வும் இந்திரா பார்த்தசாரதியும் இணைந்து 1994இல் வெளியிட்ட 'பனியும் பனையும்' என்னும் நூல் அறியப்படுகிறது. முப்பத்தொன்பது சிறுகதைகள் அடங்கிய இத்தொகுப்பில் ஆஸ்திரேலியக் கண்டத்தில் வாழும் ஒன்பது எழுத்தாளர்களின் கதைகளும், வடஅமெரிக்கக் கதைகள் பத்தும் தொகுக்கப்பட்டுள்ளதோடு இங்கிலாந்து, ஒல்லாந்து, சுவிட்சர்லாந்து, டென்மார்க், நார்வே, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய ஏழுநாடுகளில் வாழும் எழுத்தாளர்களுடைய ஆக்கங்கள் இடம்பெற்றிருந்தன.

இத்தகைய புகலிடச்சிறுகதை வரலாற்றில் அறியப்பட்டிருக்கின்ற சிறுகதை எழுத்தாளர்களுள் சிலர் இங்குக் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களுள் முதன்மையானவராக அறியப்படக்கூடியவர் எஸ்.பொ. ஆவார். இவரது எழுத்துக்களைக் குறித்து பா.இரவிக்குமாரும் த.சுமதியும்" உலகந் தழுவி நின்றாலும் எஸ்.பொ.வின் வேர் யாழ்பாணக் கலாசாரத்தை ஊடுருவி நிற்பது. உலக இலக்கியங்களின் காற்றோடு கைகுலுக்கிக் கொள்ளும் அதே வேளையில் எஸ்.பொ.வுடைய எழுத்துக்களின் ஆன்மா, தான் பிறந்த மண்ணோடும் மக்களோடும் இரண்டறக் கலந்து நிற்கின்றது" 56 என்று அடையாளப்படுத்தியுள்ளனர்.

என்.கே. மகாலிங்கம் (கனடா), பார்த்திபன் (ஜெர்மனி), அ. முத்துலிங்கம் (கனடா), லெ. முருகபூபதி (ஆஸ்திரேலியா), அ. பால மனோகரன் (டென்மார்க்), ஸ்ரீதரன் (அமெரிக்கா), புஷ்பராஜன் (இங்கிலாந்து), அ. இரவி (ஜெர்மனி), புவனன் (பிரான்ஸ்), குமார்மூர்த்தி (கனடா), தா. பாலகணேசன் (பிரான்ஸ்), ராஜேஸ்வரி பலசுப்பிரமணியம் (இங்கிலாந்து), தமயந்தி (நார்வே), கந்தையா ரமணிதரன் (அமெரிக்கா), சிவலிங்கம் சிவபாலன் (பிரான்ஸ்), ப.வி.சிறீரங்கன் (ஜெர்மனி), சந்திரா ரவீந்திரன் (இங்கிலாந்து), சந்திரவதனா செல்வகுமாரன் (ஜெர்மனி), தேவகாந்தன் (இந்தியா), மாத்தளை சோமு (ஆஸ்திரேலியா), வ.ந. கிரிதரன் (கனடா), ஷோபாசக்தி (பிரான்ஸ்), கலாமோகன் (பிரான்ஸ்) ஆகியோர் புகலிடப்படைப்பாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். (மேலே அடைப்புக்குறிக்குள் குறிக்கப்பெற்றுள்ள நாடுகள் படைப்பாளர்கள் புகலிடமாக அடைந்துள்ளவையாகும்)

தொகுப்புரை

மாற்றுவரலாற்று எழுதியலாக முன்வைக்கப்பெற்ற கருத்தியல்களுள் ஒன்று விளிம்புநிலை எழுத்துக்களாகும். இத்தகைய விளிம்புநிலை எழுத்துக்கள் பால், இனம், நிறம், சாதி, வாழிடம், நோய் ஆகிய காரணங்களால் அதிகாரமையத்தை விட்டுத் துரத்தியடிக்கப்பெற்ற மக்களைப் பிரதிபலிப்பனவாக அமைகின்றன. விளிம்புநிலையினருள் ஒருவராகக் கருதப்படுகின்ற புலம்பெயர்ந்தோர் வாழிடத்தை விட்டுத் துரத்தியடிக்கப்பட்டு புகலிடத்தில் இரண்டாம் தரக் குடிமக்களாக வாழ்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ்ச்சூழலைப் பொறுத்தவரையில் 1983ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்துக்குப் பின் உலகின் பல பாகங்களை அடைந்த இலங்கைத் தமிழர்களே புலம்பெயர்ந்தோர் என்று அறியப்படுகின்றனர். அவர்கள் புகலிடமாகத் தஞ்சமடைந்துள்ள இடங்களில் வாழ்கின்ற வாழ்க்கை முறைகளும், கடந்த கால ஈழத்து வாழ்க்கை பற்றிய நினைவேக்கங்களும் அவர்களால் படைக்கப்பெற்றுள்ள இலக்கியங்களின் பாடுபொருள்களாக அமைந்துள்ளன. பல்வேறு இலக்கிய வகைகள் தோன்றிய போதிலும் புதுக்கவிதையும் சிறுகதையுமே அவற்றுள் முன்னணியில் அமைந்துள்ளன. எனினும் வாழ்வியல் அனுபவங்களை நூல்களிலும் இதழ்களிலும் பல்வேறு பரிமாணங்களில் வெளியிடுவதில் புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள் சிறந்து விளங்குகின்றன.

துணைநூல்கள்

1. எஸ்.பொ., பனிக்குள் நெருப்பு, மித்ர வெளியீடு, சென்னை, நான்காம் பதிப்பு, 2006.
2. கார்த்திகேசு ரெ., விமர்சனமுகம், மித்ர ஆர்ட்ஸ் &கிரியேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு, 2004.
3. கார்த்திகேசு சிவத்தம்பி, ஈழத்துத் தமிழிலக்கியத் தடம் 1980-2000 பார்வையும் விமர்சனங்களும், மூன்றாவது மனிதன் பதிப்பகம், கொழும்பு, 2000.
4. சிவசுப்பிரமணியன் ஆ., அடித்தளமக்கள் வரலாறு, மக்கள் வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 2000.
5. மார்க்ஸ் அ., வேல்சாமி பொ., (தொ.ஆ.), விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க்கதையாடல்களும், நிறப்பிரிகை வெளியீடு, கும்பகோணம், 1998.
6. நடராசன் தி.சு., இராமசாமி அ.,(தொ.ஆ.), பின்னை நவீனத்துவம்-கோட்பாடுகளும் தமிழ்ச்சூழலும், விடியல் பதிப்பகம், கோயமுத்தூர், முதற்பதிப்பு, 1998